5. அரசினர் தீர்மானம்

தனியார் அலுவலுக்குப் பதில் அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்வதுபற்றி

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை 23 (1)-வது விதியைத் தளர்த்தி, பேரவையில் இன்றைக்கு நடைபெறவேண்டிய தனியார் அலுவல் களுக்குப் பதிலாக அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. எஸ். வடிவேல் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தச் சபையிலே விவாதிக்கப்படுவதற்காக விதி 41-ன்கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் கற்பழிக்கப் பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் மிகவும் அவசரமாக விவாதிக்க வேண்டுமென்று தீர்மானத்திலே கேட்டிருந்தேன். அதற்கு அனுமதி அளிக்காமல் இப்படிப் பாரபட்சமாக நடந்து கொள்வது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் அவையிலே சொல்லக்கூடாது ; அவையிலே சொல்லக்கூடியதல்ல ; என் அறையில் வந்து சொல்ல வேண்டும். உட்காருங்கள்.

திரு. எஸ். வடிவேல் : என்னுடைய தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கவில்லையாதலால், அதை ஆட்சேபித்து நான் வெளிநடப்புச் செய்கிறேன். (திரு. எஸ். வடிவேல் வெளியேறினர்.)

பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1973) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை* அளிக்கிறேன்.

---

* 29—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.